R4789

# A CITY WITHOUT WALLS
# மதிலிழந்த பட்டணம்

“தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிழந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்.”நீதிமொழிகள் 25:28

நமது தலைப்பு வசனத்தில் ஆற்றல் வாய்ந்த உவமானம் காணப்படுகிறது. ஒரு பட்டணத்தில் விசேஷமாக பழங்காலத்தில் ஒருவருக்கொருவர் நன்மைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் கூடி வாழ்வார்கள். கொள்ளையர்கள் கொள்ளையிட தயாராயிருப்பார்கள். பட்டணத்தின் மதிற்சுவர் அதில் வாழ்பவர்களுக்கு அவர்களது சொத்துக்களையும், உரிமைகளையும், நன்மைகளையும் பாதுகாக்க உதவியாயிருந்தது.

இதே நோக்கத்திற்காகவே தேவன் மனிதனை படைக்கும் போது அவனுக்கு ஒரு சித்தத்தை கொடுத்து படைத்தார். அது மனிதனுக்கு தனது சிருஷ்டிகரின் சாயலில் ஒரு அம்சமாக இருக்கிறது. நாம் பலவீனமான சரீரத்தை உடையவர்களாக இருந்தாலும் பலமான உணர்வுகளை உடைய ஒரு சித்தத்தை பெற்றிருக்கிறோம். மற்றவர்களுக்கு வெளிப்படையாக கீழ்ப்படியக்கூடிய நிலைமைக்கு கொண்டு வரப்பட்டாலும் கொண்டு வரப்படாமல் இருந்தாலும் நமது சித்தம் பலமுள்ளதாக இருக்கலாம். நமது சரீரம் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தாலும் நமது சித்தம் நமது சம்மதம் இல்லாமல் அடிமைப்படுத்தப்பட முடியாது. நமது சித்தம் என்பது நம்மிடமிருந்து எடுக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. ஆனால் அது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அது சரி செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. பலவீனமான இடங்களில் அது பலப்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது.

### சித்தத்தை பலப்படுத்த வேண்டிய அவசியம்

இதை கவனித்து பலப்படுத்தாதவர்கள், தாக்கப்படுவதற்கான சாத்தியங்களைக் காண்பார்கள். இவர்கள் அதிகமாக உடைந்து போய் விரைவில் சித்தமே இல்லாமல் அல்லது சுய கட்டுப்பாடு இல்லாமல் போய்விடுவார்கள். மதிற்சுவர் அழிக்கப்பட்டு எதிரிகள் நுழைந்த அழிந்து போன பட்டணத்தைப் போலே, மனிதன் பாவத்திற்கும் பலவிதமான பலவீனங்களுக்கும், சாத்தானுடைய தாக்குதல்களுக்கும் இடங்கொடுத்து, அவனது மனிதத்தன்மையை இழந்து மற்றும் எல்லாவற்றையும் இழக்கக்கூடிய நிலைமைக்கு செல்வான்.

சத்துருவானவனின் சகல தாக்குதல்களையும் ஒரு புது சிருஷ்டியாக, ஒரு கிறிஸ்தவனாக தாங்கி நிற்பது நமது கடமையாக இருக்கிறது. இந்த தாக்குதல்கள் காணக்கூடிய சக்திகளிடமிருந்து மாத்திரமல்ல கெட்ட ஆவிகளிடமிருந்தும் வருகிறது. நம்மை உடைமையாக்கிக்கொள்ள நாடுகிறவர்களிடமிருந்தும் வருகிறது. அவர்கள் கெட்ட ஆவிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறார்கள். அவர்களுடைய சித்தங்கள் அடங்கிப்போனது, உடைந்த போனது, நமது தலைப்பு வசனத்தில் சித்தரிக்கப்பட்டது போல, அவர்கள் தங்களது சத்துருக்களின் கைகளில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எதிரியை விரட்டவும், அவனை எதிர்க்கவும் தங்களது சிந்தைகளின் சுவரை பலப்படுத்தவும், உடனே கர்த்தராகிய இயேசுவுடன் உடன்பாடு செய்யவும் முயற்சிக்க வேண்டும். அவர்கள் தங்களது இருதயங்களை முழுமையாகவும் நிறைவாகவும் கொடுத்து, அவரது சித்தத்தையும் வார்த்தையும் வழிநடத்துதலையும் எல்லா காரியங்களிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உண்மைதான். இப்படியாக அவர்கள் பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகும் போது, அவர்கள் நீதிக்கும் கிறிஸ்துவுக்கும் அடிமைகளாகிறார்கள், நன்மையாகவும், சத்தியமாகவும் சரியானதாகவும் இருக்கக்கூடியவைகளுக்கு ஊழியம் பண்ணுவதையும் பிதாவானவருக்கு இணக்கமாக இருப்பதையும் கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்களாயிருக்கிறவர்கள் உணருவார்கள். தம்முடைய சொந்த இரத்தத்தினால் முழு மனுக்குலத்தையும் விலைக்கு வாங்கினவரின் மூலம் தம்முடைய அன்பை காண்பித்தவரின் கட்டுப்பாட்டின் கீழ் தங்களை தடையின்றி முழுவதுமாக வைத்துக்கொள்வதில் சந்தோஷப்பட வேண்டும். நிச்சயமாக அனைவரும் அவரது கைகளில் பாதுகாப்பாக இருப்பார்கள்!

ஆனால் நம்மை கர்த்தரின் கைகளில் சும்மா ஒப்புக்கொடுத்தால் மட்டுமே போதாது? சங்கீதக்காரன் ஆலோசனை கூறுவதாவது: “உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தை போல விளங்கப்பண்ணுவார்.” (சங்கீதம் 37:5,6) அப்போஸ்தாலர் பவுல் கூறுகிறதாவது: “தேவன், தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையும் உங்களில் உண்டாக்கிறவராயிருக்கிறார்.” (பிலிப்பியர் 2:13) அவரது வசனத்தின் வாக்குத்தத்தத்தின் மூலம் கிரியை நடப்பிக்கிறார். நம்முடைய தலையானவரின் சாயலில் குணலட்சணம் அபிவிருத்தியடைய நாம் விரும்பினால், நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்கள், ஒழுங்குகள், தாழ்த்துகிற செயல்முறைகள் மூலம் நமக்கு வருகிற ஒவ்வொரு பாடத்தையும் கவனிப்பது நலமாயிருக்கிறது.

### “தன் ஆவியை அடக்குகிற மனுஷன் ஒரு பட்டணத்தை பிடிக்கிறவனைக் காட்டிலும் பெரியவனாயிருக்கிறான்”

நமது சிந்தைகளை புதுப்பிப்பதின் மூலம் நம்மில் பெரிய மறுரூபமடையும் வேலை நிறைவேற்றுவதில் நாம் தேவனுடன் உடன் வேலையாட்கள் என்கிற உண்மையை நாம் காணாமல் விட்டுவிடக்கூடாது. நம்முடன் போராடுவதே நமது பெரிய போராட்டமாக இருக்கிறது. அதற்காக நம்முடைய கர்த்தரின் வசனமும் இருக்கிறது. “தன் ஆவியை அடக்குகிற மனுஷன் ஒரு பட்டணத்தை பிடிக்கிறவனைக் காட்டிலும் உத்தமன்.” ஏனெனில் சுய கட்டுப்பாட்டின் உண்மையான குணலட்சணத்தின் போராடும் தன்மையை அப்பியாசப்படுத்த அந்த அளவுக்கு கற்றுக்கொண்டிருக்கிறான்.

ஆனால் நமது முன்னேற்றத்தின் மந்தநிலை காரணமாக நாம் உற்சாகம் குன்றாமல் இருக்க வேண்டும். நமது சொந்த சிந்தையை, சொந்த ஆவியை அடக்குவதை அடைதல், இவைகளை நமது முழு கட்டுபாட்டுக்குள் கர்த்தருக்கு முழு இசைவுக்கு கொண்டு வருதல் ஆகும் என்பதை நாம் எப்பொழுது ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் முடிந்தவரை, “முடிவில்” அடைந்தாயிற்று என்று அப்போஸ்தலர் கூறுவது போல கர்த்தருடன் இசைவாக இருக்கக்கூடிய கர்த்தருடைய ஜனங்களுடனும் இணக்கமாக இருக்க வேண்டும். ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையும் தெய்வீக உறுதிமொழியை நம்பி “சோர்ந்து போகாமல் நற்கிரியை செய்வதின்” மூலம் படிப்படியாக அடையப்பெறுகிறது.

இந்த மாபெரும் அபிவிருத்திக்காக முழு சக்தியுடன் நாம் அனைவரும் பாடுபடுவோமாக. நாம் நமக்கு முன்பாக அதை, அந்த நோக்கத்தை, குறிக்கோளை, தரநிலையை வைத்திருக்க வேண்டும். நாம் அவ்வப்போது தோல்வியடையலாம். நாம் சரியானபடி இவைகளை செயல் படுத்தினால் ஒவ்வொரு தோல்வியும் நமக்கு பலத்தைக் கொடுக்கும். நமது விழுகையினால் இயற்கையாக இருக்கக்கூடிய நமது குணலட்சத்தின் பலவீனங்களை நாம் முன்பு உணராதிருந்ததைக் காட்டிலும் இன்னும் அதிகம் தெளிவாக ஒவ்வொரு தோல்வியும் நமக்கு காண்பிக்கும். நமது பலவீனங்கள் சரியானபடி கவனிக்கப்பட்டு, எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட்டால் சீக்கிரத்தில் நாம் தேவ கிருபையினால் நமது மாபெரும் போதகரின் கீழ் வருவோம். அவருடைய வார்த்தை, உதாரணம் மற்றும் வழிநடத்துதலினால் அந்த தாழ்த்தும் நிலைமைக்கு, இணக்கமாயிருக்கும் நிலைமைக்கு வழி நடத்தும். தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக இசைந்திருக்கும்.

பின்னோக்கிப் பார்த்து அப்படிப்பட்டவர்கள், தொடர்ந்து உணர்ந்து கொண்ட தோல்விகள், சத்துருவின் தந்திரங்கள் மற்றும் மாம்சத்தின் பலவீனங்களுக்கு எதிராக பெரிய அரணுக்கு வழிநடத்தும். “தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்” என்கிற வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப, நமது ஆசீர்வாதத்திற்காக கர்த்தரால் ரத்து செய்யப்படுவதை நாம் காண்போம். (ரோமர் 8:28)